**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**25 மார்ச் 2016 / 16 ஜமாதியுல் ஆகிர் 1437**

# நமக்கு நாம் நீதமாக நடப்பது

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه الْمَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

புனிதமிக்க இவ்வெள்ளிக்கிழமை தினத்தில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும் அவன் நமக்குத் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை அதிகரித்துக் கொள்ள முயற்சிப்போமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 70-வது வசனத்தில் கூறுகின்றான்:

أَلَمْ يَأْتِهِمْ نَبَأُ الَّذِينَ مِن قَبْلِهِمْ قَوْمِ نُوحٍ وَعَادٍ وَثَمُودَ
وَقَوْمِ إِبْرَاهِيمَ وَأَصْحَابِ مَدْيَنَ وَالْمُؤْتَفِكَاتِ أَتَتْهُمْ
رُسُلُهُم بِالْبَيِّنَاتِ فَمَا كَانَ اللَّهُ لِيَظْلِمَهُمْ وَلَٰكِن كَانُوا
أَنفُسَهُمْ يَظْلِمُونَ ﴿٧٠﴾

பொருள்: இவர்களுக்கு முன்னிருந்த நூஹ்வுடைய சமுதாயம், ஆது, ஸமூதுடைய சமுதாயம், இப்ராஹீம் உடைய சமுதாயம் மத்யன் வாசிகள், தலைகீழாய்ப் புரண்டுபோன ஊரார் ஆகியவர்களின் வரலாறு அவர்களிடம் வரவில்லையா? அவர்களுக்கு (நாம் அனுப்பிய) அவர்களுக்குரிய (இறை) தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளை கொண்டு வந்தார்கள்; (தூதர்களை நிராகரித்ததினால் அவர்கள் அழிந்தனர்.) அல்லாஹ் அவர்களுக்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லை; எனினும் அவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்கள்.

மேற்கண்ட வசனத்தின் மூலம், முற்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நாம் பாடம் பெற வேண்டும் என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நினைவூட்டுகிறான். சில சமுதாயங்கள், தவறுகள் செய்ததன் காரணமாக அவர்களின் அடிச்சுவடுகளோ, அடையாளமோ இல்லாமல் எவ்வாறு அழித்து போனார்கள் என்பதை நினைவில் கொள்ளக் கூறுகின்றான். தங்களுக்குத் தாங்களே அவர்கள் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டதால் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளானார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கடந்த வாரங்களில், மற்றவர்களிடமும் அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளிடமும் நீதமாக நடந்து கொள்வதன் அவசியத்தைப் பற்றியும்;

மற்றவர்களுக்கு அநீதம் செய்யக்கூடாது எனவும் விவாதித்தோம். அதே சமயம், நமக்கும் பாதிப்பு ஏற்படும் அளவுக்கு நாம் நடந்து கொள்வது கூடாது என்பதை இன்று விவாதிக்க உள்ளோம். திருக்குர்ஆனின் பார்வையில் நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்ளக்கூடாது என்பதன் பொருள் என்ன? எவரொருவர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடக்கவில்லையோ, அவர் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றவில்லையோ, அவர் தான் திருக்குர்ஆனின் பார்வையில் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டவர் எனத் திருக்குர்ஆன் விரிவுரையாளர்களாகிய இமாம் இப்னு கஸீர் (ரஹ்), இமாம் அத்தபரீ (ரஹ்) ஆகியோர் கருதுகிறார்கள்.

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட விளக்கமாகிறது, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நவின்ற பின்வரும் ஹதீதை எனக்கு நினைவூட்டுகிறது. இந்த ஹதீதை இமாம் திர்மிதி (ரஹ்) பின்வருமாறு பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

“மறுமைத் தீர்ப்பு நாளின் போது ஒரு அடியார் நான்கு கேள்விகளுக்குப் பதில் கூறாத வரை ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. 1. அவரது வயது காலத்தை அவர் எவ்விஷயங்களில் செலவழித்தார் 2. அவரது செல்வத்தை எப்படி செலவழித்தார் 3. செல்வத்தை எப்படி சம்பாதித்தார் 4. அவர் தனது உடல் சக்தியை எப்படி, எவ்வழியில் அதிகரித்தார்”

மேற்கண்ட ஹதீதில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அவர் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கண்ட ஹதீது கூறப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும்

வழங்கப்பட்டுள்ள வயதும், உடல் நலமும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளாகும். கல்வியறிவு, வாழ்வாதாரம் மற்றும் செல்வம் ஆகியவை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் வழங்கப்பட்டுள்ள வெகுமதிகளாகும். எவரொருவர் அல்லாஹ்வினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள வெகுமதிகளைப் பயன்படுத்தி, அல்லாஹ் அவருக்கு கட்டளையிட்டுள்ளதன் பிரகாரம், அவர் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகிறோரோ அவர் தனக்குத் தானே நீதம் செய்தவராகக் கருதப்படுவார். எனினும், எவரொருவர் அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ள வெகுமதிகளை, அல்லாஹ்வின் கட்டளைகள் மற்றும் சட்டதிட்டங்களை மீறி நடப்பதற்குப் பயன்படுத்துகிறாரோ, மனம் திருந்த வேண்டுமென்ற நோக்கமின்றி பாவங்களைச் செய்ய முற்படுகின்றாரோ அவர் தனக்குத்தானே அநீதம் செய்தவராகக் கருதப்படுவார். மறுமையில் அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் அவர் கேள்வி கேட்கப்படும் போது அவர் கடுமையான நிலையை எதிர்கொள்வார் எனப் பயப்படப்படுகிறது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நாம், இது நாள் வரை, நமது வாழ்நாளை எப்படி செலவழித்தோம்? நாளை மறுமை நாளையில் அல்லாஹ்வின் முன்னிலையில் நாம் இருக்கும் போது, அவனிடம் காண்பிப்பதற்காக எம்மாதிரியான நற்காரியங்களை நம்மால் கொண்டு செல்ல முடிகின்ற நிலையில் உள்ளோம்? நமக்கு வழங்கப்பட்டுள்ள உடல் நலத்தின் மூலம் நற்காரியங்களைச் செய்துள்ளோமா? பங்களிப்புகளைச் செய்துள்ளோமா? தேவையுள்ளவர் களுக்கு உதவி செய்துள்ளோமா? மற்ற மக்களுக்கு ஓரளவாவது ஆதரவுகள் ஏற்பட முயற்சி செய்துள்ளோமா? நமது கல்வியறிவை நமது பிள்ளைகளுடனும் மற்றவர்களுடனும் பகிர்ந்து கொண்டோமா? அவற்றின் மூலம் அவர்கள் பலன்கள் பெற்று, சிறந்தவர்களாக ஆகும்

வாய்ப்புள்ளதல்லவா? என்றெல்லாம் நமக்கு நாம் கேள்விகளைக் கேட்டு சிந்திக்க வேண்டும். வருந்தி, திருந்துவதற்காக நாளை வரையோ அல்லது ரமதான் மாதம் வரும் வரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். வயதான பின்பு நமது வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம் எனவும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம்.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

நமக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளை அல்லாஹ்வின் வழிகாட்டுதலின் பிரகாரம் பயன்படுத்தும் ஆற்றலை நாம் பெறுவதற்கு சரியான கல்வியறிவை நாம் பெறுவது அவசியமாகும். மற்றவர்களின் கருத்துக்களை சரியாக ஆய்வு செய்யாமல், புலனாய்வு செய்யாமல் கண்மூடித்தனமாக பின்பற்றுவதை நாம் தேர்ந்தெடுத்தால், அது நமக்கு நாமே அநீதம் செய்வதாக இருக்கும். உதாரணமாக, நமது இளைஞர்களில் சிலர் போதைப் பொருட்களைப் பயன்படுத்தல், சூதாட்டம் மற்றும் தீவிரவாதச் சித்தாந்தங்களில் ஈடுபட்டுள்ளதைக் காண்கிறோம். இதற்குக் காரணம், அவர்கள் சரியான வழிகாட்டுதலைப் பெறவில்லை; சரியானவை மற்றும் தவறானவற்றைப் பிரித்தறியும் ஆற்றலைப் பெறவில்லை. மறுபுறம், சிறந்த பெற்றோருக்குரியத் திறன்களை, பெற்றோர்கள் பெற்றிராததும் இப்பிரச்சனைக்கான காரணங்களில் ஒன்றாகும். அம்மாதிரியானப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குப் போதுமான கல்வியறிவை சிறப்பாக வழங்கிட முடியாத நிலையில் உள்ளார்கள்.

எனவே, நமது வாழ்க்கையைப் பற்றி நாம் சிந்திப்போமாக! நாம் நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும், மற்ற படைப்புகளுக்கும், மிகவும் குறிப்பாக, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிற்கும் நீதமாக நடப்பதை உறுதி செய்வோமாக! அல்லாஹ்வின் முன்னிலையில் நாம் நிற்கும் போது

அவனது திருப்தியைப் பெற்றவர்களாக இருப்போம் என ஆதரவு வைக்கின்றோம். அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய நமது கடமைகளை நம்மால் முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்ற எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.